# நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**வை.சொர்ணலதா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.**
**sornalathav83@gmail.com**

63

**ஆய்வின் நோக்கம்**

நாடகம் எனப்படுவது பல கலைகளும் இணைந்த ஒரு கலையாகும். இங்கு நடிப்பு மற்றும் இசை, ஒப்பனை, வசனங்கள், கவிதைகள் மற்றும் பாடல்கள்பலவகையான இலக்கிய வடிவங்கள் ஒருங்கே இங்கு வெளிப்படுத்தப்படுகின்றன. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வுச்சுருக்கம்**

இயலும், இசையும் கலந்து கதையை தழுவி நடித்துக் காட்டுவது நாடகமாகும். நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை ஆகும். அதாவது, கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம். நாடகத்திற்கு அகம் நாடு, உன்னை உணர், அகத்தை நாடு என்றெல்லாம் பலவாறு அறிஞர்கள் பொருள் கூறுகின்றனர். எனினும் நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தக் கூடியதாகும். ஒருவர் செய்வதைப்போல தானும் செய்து பார்க்க வேண்டும் எனும் எண்ணம் மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்ற காரணமாக அமைந்தது.

**முன்னுரை**

உலகில் வேறு எங்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. முத்தமிழ் என சிறப்பிக்கும் பொருளுடையது. இசைத் தமிழ், இயல் தமிழ், நாடகத் தமிழ் என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் நாடகத்தமிழ் தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

**நாடகம்**

இயலும், இசையும் கலந்து கதையை தழுவி நடித்துக் காட்டுவது நாடகமாகும். நாடகம் என்பது நாடு+அகம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. நாட்டை அகத்தில் கொண்டது நாடகம்ஆகும். நாட்டின் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடகம் எனப் பெயர் பெற்றது என்கின்றனர்.

நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை ஆகும். அதாவது, கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம். நாடகத்திற்கு அகம் நாடு, உன்னை உணர், அகத்தை நாடு என்றெல்லாம் பலவாறு அறிஞர்கள் பொருள்

கூறுகின்றனர். எனினும் நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தக் கூடியதாகும். கதையை நிகழ்ச்சியை உணர்வை நடித்துக் காட்டுவது கூத்தாகவும் ஆடிக் காட்டுவது நாடகம் எனவும் கூறுவர். இதற்கு கூத்துக்கலை என்ற பெயரும் உண்டு.

**நாடகம் பற்றிய குறிப்புகள்**

தமிழ் நாடகத் தன்மை தொல்காப்பியர் நாடக வழக்கினும் என்று நாடகத்தைகுறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரம் நாடகக் கூறுகளுடன் நாடக காப்பியமாகத் திகழ்கின்றது. இதனால்தான் சிலப்பதிகாரத்தை குடிமக்கள் காப்பியம், நாடகக் காப்பியம் என்றெல்லாம் அழைக்கின்றனர். "கூத்துக் கலைக்கு ஏற்றவாறே குரல்வழி நாடக அரங்கம்" இந்த செய்திகளையும் சிலப்பதிகாரத்தில் அறியமுடிகின்றது. அகத்தியம், குணநூல் கூத்து நூல், மதிவாணர் நாடகத்தமிழ் போன்ற நாடக நூல்கள் பழந்தமிழ் வழக்கில் இருந்தன என்பதை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்குநல்லார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, ஆடிப் பாவை போன்ற கூத்துக்களை சங்ககாலத்தில் காணமுடிகின்றது. தமிழ் இலக்கியங்களில் நாடகம் பற்றிய குறிப்புகள் ஏராளம் உள்ளன. குறிப்பாக தொல்காப்பியத்திலும், சிலப்பதிகாரத்திலும் நாடகம் பற்றிய குறிப்புகளை மிகுதியாக காண முடிகின்றது.

தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.இலக்கணம் நாடக நூல்களும் ஏராளம் உள்ளன. செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் எனும் நூலில் நாடகம், அதனுடைய விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறை, நடிப்புக்கு இலக்கணம் போன்றவற்றை குறிப்பிட்டுள்ளனர்.

**நாடக இலக்கணம்**

நாடகம் எனப்படுவது பல கலைகளும் இணைந்த ஒரு கலையாகும். இங்கு நடிப்பு மற்றும் இசை, ஒப்பனை, வசனங்கள், கவிதைகள் மற்றும் பாடல்கள் என பலவகையான இலக்கிய வடிவங்கள் ஒருங்கே இங்கு வெளிப்படுத்தப்படுகின்றன. மிகுந்த உணர்ச்சி பெருக்குடையதாகவும் இரசனையும் இலக்கிய சுவை செறிந்தவையாக இந்த நாடகங்கள் காணப்படுகின்றன. மனிதனுடைய அடிப்படை உணர்வுகளை வெளிப்படுத்தி காட்டுவதாகவும் காணப்படுகின்ற அரங்க கலையினை நாடகங்கள் எனலாம். இவ்விலக்கணங்களை தழுவி தமிழில் பல நாடகங்கள் தோன்றின.

**தோற்றம்**

மனிதர்கள் சிந்திக்க துவங்கிய காலத்தில் இருந்தே நாடகங்கள் ஆரம்பித்ததாக சொல்லப்படுகின்றது. உலகளவில் கிரேக்கம் மற்றும் எகிப்து போன்ற நாடுகள் நாடககலைக்கு முன்னோடிகளாக சொல்லப்படுகின்றன. தமிழகத்தை பொறுத்தவரையில் தொல்காப்பியம் உருவான காலத்தில் இருந்து நாடக வழக்கு தமிழ் இலக்கியங்களில் பதியப்பட்டு இருக்கின்றது. இதனை பாடலடிகள் விளக்கி நிற்கின்றன. இதனை தொடர்ந்து தமிழ் இலக்கிய வரலாற்றில் நாடகங்கள் காலரீதியாக மக்களது வாழ்வியலோடு இணைந்து சிறப்பாக வளர்ந்து வந்துள்ளன.

**நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

எட்டு வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம் மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பாகும். தெருக்கூத்துகளாக இருந்து மேடை நாடகங்களாக மாறி இலக்கியங்களாக மறுமலர்ச்சி பெற்றன. இது தொன்றுதொட்டு படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம் என்கின்றனர். நாடகம் தோற்றம் பெற்றதன் வரலாற்றை அறிவதற்கு முன்பே “போல செய்தல்” என்னும் பண்பு அடிப்படையாக அமைந்ததை நம்மால் காணமுடியும். ஒருவர் செய்வதைப்போல தானும் செய்து பார்க்க வேண்டும் எனும் எண்ணம் மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்ற காரணமாக அமைந்தது.

**கூத்தும் நாடகமும்**

கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டியும், கூத்தாக ஆடிக்காட்டியும் நாடகம் நடத்தப்படுகிறது. இதனைக் கூத்துக்கலை என்றும் குறிப்பிடுவர். சங்க காலத்தில் கூத்து துணங்கைக் கூத்து ஆடிப்பாவை போன்ற கூத்து வகைகளைக் காணமுடிகின்றது. மேலும் நாடகங்களும் சங்க காலத்தில் இருந்துள்ளன. இந்த நாடகங்களை வேத்தியல், பொதுவியல் என இருவகையாகப் பிரிக்கலாம். வேத்தியல் என்பது வேந்தனுக்காக நடித்துக் காட்டப்படுபவையாகும். பொதுமக்களுக்காக நடித்து காட்டப்படுவது பொதுவியலாகும்.

**நாடகத்தின் வளர்ச்சி நிலை**

பல்லவர் காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசம் என்னும் நாடக நூலை எழுதியுள்ளார். இது மிகவும் புகழ் பெற்றிருந்தது.இன்னிசை கூத்து, வரலாற்று கூத்து என இருவகை நாடக மரபுகளும் இக்காலப்பகுதியில் இருந்தன. பதினோராம் நூற்றாண்டின் சோழர் காலத்தில் இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நொண்டி நாடகங்கள் தோன்றின. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய பெரும்பாலான நாடகங்கள் மகாபாரதம், இராமாயணம் முதலிய காவியங்களின் கதைக் கூறிலிருந்து படைக்கப்பட்டன.

19 ம் நூற்றாண்டில் சமுதாய சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன. நாட்டு விடுதலை போராட்டக் காலகட்டத்தில் பல்வேறு தேசிய நாடகங்கள் அரங்கேறின. இருபதாம் நூற்றாண்டில் நாடகத்துறையில் பெருந்தொண்டு ஆற்றியவர் சங்கரதாஸ் சுவாமிகள் இவர் நாடக உலகின் இமயமலை என்று சிறப்பிக்கப்பட்டார்.

**வகைப்பாடுகள்**

நாடகங்களின் வகைப்பாடுகள் பற்றி நோக்குவோமானால் பிரதானமாக எட்டு வகையான நாடகங்கள் தமிழில் அறியப்படுகின்றன. அவையாவன

1. தமிழ் நாடகங்கள்
2. புராண நாடகங்கள்
3. இலக்கிய நாடகங்கள்

4. துப்பறியும் நாடகங்கள்
5. வரலாற்று நாடகங்கள்
6. நகைச்சுவை நாடகங்கள்
7. மொழிபெயர்ப்பு நாடகங்கள்
8. தழுவல் நாடகங்கள்

என்ற வகையான நாடகங்கள் காணப்படுகின்றன. கலையினை சுவாசமாக கொண்ட நேசித்த தமிழர்கள் வாழ்வியலில் நாடக்கலை மென்மேலும் உயிர்பெற்றது என்றே கூறிவிட முடியும்.

**பங்காற்றியவர்கள்**

தமிழ் நாடகக்கலையினை பொறுத்த வரையில் அதற்கென அரும்பாடுபட்டவர்கள் வரிசையில் தமிழ் நாடகத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர் “பம்மல் சம்மந்த முதலியார்” ஆவார். இவர்தொண்ணூறுக்கு மேற்ப்பட்ட நாடகங்களை உருவாக்கினார். “பரிதிமார் கலைஞர்” மற்றும் “பேராசிரியர் சுந்தரம்பிள்ளை”, “மறைமலைஅடிகளார்”, “தியாகராஜ பாகவதர்”, “அறிஞர் அண்ணா” என ஒரு நீண்ட வரிசையானது காணப்படுகிறது. நாடகங்கள் மக்களின் மனதில் நல்ல செய்திகளையும் சமூக கருத்துக்களையும் கொண்டு சேர்க்கும் சிறந்த ஊடகங்களாக காணப்பட்டன.

**முடிவுரை**

பண்டைய மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டமாக வளர்ச்சியடைந்து, பின்னர் தோல்பாவைக் கூத்தாக, நில பாவை கூத்தாக மாறியிருக்கின்றது. உயிரற்ற பொருட்களை வைத்து விளையாடிய விளையாட்டு படிப்படியே உயிருள்ள மனிதர்களை வேடம் புனையச் செய்து, ஆடிப்பாடி நடிக்க வைத்ததே பாவைக்கூத்து முதல் பல்வேறு நிலைகளில் நாடகம் வளர்ச்சி அடைந்ததன் விளைவே இன்று நாம் காணும் புதிய நாடாக உலகில் அடியெடுத்து வைத்து இருப்பதை நம்மால் காண முடிகின்றது. இன்று நாடகங்கள் அரிதாகவே நடைபெறுகின்றன. கல்விச்சாலைகளில் ஓரங்க நாடகம், நாட்டிய நாடகங்கள் நடித்துக் காட்டப்படுகின்றன. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொலைக்காட்சியிலும் வானொலியிலும் நடித்துக் காட்டப்படுகின்றன. நாடகங்கள் கதையழகோடு கவிதையழகு கொண்டு மக்களின் வாழ்வை செழுமைப்படுத்துபவையாக அமைந்தால் வரவேற்கத்தக்கதாகும்.

**பார்வை நூல்**

1.தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்,
முனைவர் ஆறு.அழகப்பன், பாரிநிலையம்